# KAMARAJ COLLEGE (Autonomous)

Accredited with A+ Grade by NAAC

(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)

**(4 Pages)** **Reg. No: ……………………………………………**

**Question Code No : 26E03631-T** **Course Code : 25USPA21**

**UG Degree - End Semester Examinations, April 2026**

**Fourth Semester**

**B.A. PUBLIC ADMINISTRATION**

**Citizen Centric Governance**

**(For those who joined in June 2025 onwards)**

**Time : 3Hours** **Maximum : 75 Marks**

**பகுதி அ - (10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

CO:1 K:1 1. பின்வருவனவற்றில் எது "நல்லாட்சி"யின் (Good Governance) ஒரு கூறல்ல?

(அ) வெளிப்படைத்தன்மை (ஆ) பொறுப்புடைமை

(இ) ஏகபோகம் (ஈ) சட்டத்தின் ஆட்சி

CO:1 K:1 2. உலக வங்கி "நல்லாட்சி" எனும் கருத்தாக்கத்தை முதன்மையாக எதனுடன் தொடர்புடையதாக அறிமுகப்படுத்தியது?

(அ) வர்த்தக தாராளமயமாக்கல் (ஆ) மேம்பாட்டு உதவிகள் மற்றும் நிபந்தனைகள்

(இ) இராணுவ நிர்வாகம் (ஈ) சுற்றுச்சூழல் கொள்கை

CO:2 K:2 3. RTI என்பதன் விரிவாக்கம் என்ன?

(அ) Right to Information (ஆ) Right to Infrastructure

(இ) Right to Integration (ஈ) Right to Implementation

CO:2 K:2 4. நிர்வாகத்தில் கடைப்பிடிக்கப்படும் "பூஜ்ஜிய சகிப்புத்தன்மை உத்தி"யை (Zero Tolerance Strategy) பின்வருவனவற்றில் எது சிறப்பாக விவரிக்கிறது?

(அ) சிறிய அளவிலான விதிமீறல்களைப் புறக்கணித்தல் (ஆ) அனைத்து வகையான ஊழல்கள் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தல்

(இ) அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் (ஈ) அரசு சேவைகளைத் தனியார்மயமாக்கல்

CO:1 K:3 5. “குடிமக்கள் சாசனம்“ முதன்முதலில் எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) இந்தியா (ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(இ) இங்கிலாந்து (ஈ) ஆஸ்திரேலியா

CO:3 K:1 6. “சேவோத்தம் மாதிரி“ (Sevottam Model) எதனுடன் தொடர்புடையது?

(அ) நுகர்வோர் பாதுகாப்பு (ஆ) நீதித்துறை நிர்வாகம்

(இ) சுற்றுச்சூழல் நிர்வாகம் (ஈ) அரசுத் துறைகளில் சேவை வழங்கல் தர மேலாண்மை

CO:4 K:1 7. “சமூக தணிக்கை“ என்பது எதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்?

(அ) அரசு கட்டிடங்களை ஆய்வு செய்தல் (ஆ) பொதுத் திட்டங்களின் சமூகச் செயல்பாடுகளை மதிப்பிடுதல்

(இ) அரசு சாரா நிறுவனங்களின் வரி மதிப்பீடு செய்தல் (ஈ) நிறுவனங்களின் இலாபத்தைத் தணிக்கை செய்தல்

CO:4 K:1 8. “சேவை வழங்கல் உரிமைச் சட்டம்“ முதன்மையாக எதை நோக்கமாகக் கொண்டுள்ளது?

(அ) பொதுப் பயன்பாட்டுச் சேவைகளைத் தனியார்மயமாக்கல் (ஆ) பொதுச் சேவைகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்

(இ) குடிமக்களுக்கு இலவச சேவைகளை வழங்குதல் (ஈ) காவல்துறை நிர்வாகத்தைப் பலப்படுத்துதல்

CO:5 K:1 9. “தேசிய மனித உரிமைகள் ஆணையம்“ எதன் கீழ் நிறுவப்பட்டது?

(அ) மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950

(இ) தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (ஈ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019

CO:5 K:1 10. “தேசிய மகளிர் ஆணையம்“ எந்த ஆண்டில் நிறுவப்பட்டது?

(அ) 1990 (ஆ) 2000

(இ) 1995 (ஈ) 1992

**பகுதி ஆ – (5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

CO:1 K:4 11. (அ) நல்லாட்சியின் கூறுகளை விளக்கவும்.

**(அல்லது)**

(ஆ) ஆட்சியில் குடிமைச் சமூகத்தின் பங்கு குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.

CO:2 K:3 12. (அ) குடிமக்கள் மைய நல்லாட்சியின் கொள்கைகளை விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) குடிமக்கள் மைய நல்லாட்சியின் பின்னணியில், குடிமைப் பணிச் சீர்திருத்தங்கள் குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.

CO:3 K:3 13. (அ) குடிமக்கள் சாசனத்தின்" கோட்பாடு மற்றும் நோக்கங்களை விளக்கவும்.

**(அல்லது)**

(ஆ) சேவை வழங்கலில் "சேவோத்தம்" (Sevottam) மாதிரி குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.

CO:4 K:3 14. (அ) ஆட்சியில் "மக்கள் பங்கேற்பு" என்பதன் கோட்பாடு மற்றும் வடிவங்களைச் சுருக்கமாக விளக்கவும்.

**(அல்லது)**

(ஆ) "குடிமக்கள் குறைதீர்ப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு" குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.

CO:5 K:5 15. (அ) "தேசிய மனித உரிமைகள் ஆணையம்" என்றால் என்ன? அதன் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை விளக்கவும்.

**(அல்லது)**

(ஆ) "தேசிய மகளிர் ஆணையம்" குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.

**பகுதி இ – (5× 8 = 40 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

CO:1 K:4 16. (அ) உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆகியவை வரையறுத்துள்ள ஆட்சிக்கான கோட்பாடுகள் மற்றும் கருத்துருக்களை விரிவாக விவாதிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) ஆகியவற்றின் பின்னணியில், அரசு, சந்தை மற்றும் குடிமைச் சமூகம் ஆகியவற்றுக்கு இடையிலான உறவை ஆராயவும்.

CO:2 K:5 17. (அ) "குடிமக்கள் மைய நல்லாட்சி" என்பதன் கோட்பாட்டை விளக்கி, அதற்கான முன்நிபந்தனைகள் மற்றும் கொள்கைகளை விரிவாக விவாதிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) பொது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும்

பொறுப்புடைமையை மேம்படுத்துவதில், “மின்னாளுகை“ (E-Governance) மற்றும் “தகவல் அறியும் உரிமை“ (RTI) ஆகியவற்றின் பங்கை ஆராயவும்.

CO:3 K:5 18. (அ) குடிமக்கள் மைய நல்லாட்சியின் ஒரு கருவியாகத் திகழும் “குடிமக்கள் சாசனத்தின்“ கோட்பாடு, நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றை விவாதிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) “குடிமக்கள் மையத்தன்மைக்கான ஏழு படிநிலை மாதிரியை“ விளக்கி, இந்தியாவில் பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துவதில் அதன் பொருத்தப்பாட்டை மதிப்பிடவும்.

CO:4 K:5 19. (அ) இந்தியாவில் “சேவை பெறும் உரிமை“ என்பதன் கோட்பாடு மற்றும் நடைமுறையை ஆராயவும். இது குடிமக்கள் மைய நல்லாட்சியை எவ்வாறு வலுப்படுத்துகிறது?

**(அல்லது)**

(ஆ) இந்தியாவில் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவுகளில் செயல்படும் “நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளின்“ கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை விவாதிக்கவும்.

CO:5 K:5 20. (அ) இந்தியாவில் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட ஏதேனும் மூன்று தேசிய ஆணையங்களின் அமைப்பு, பணிகள் மற்றும் முக்கியத்துவத்தை ஆராய்க.

**(அல்லது)**

(ஆ) குடிமக்களின் நலன்களைப் பாதுகாப்பதில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் தேசிய குழந்தைகளுக்கான உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியவற்றின் பங்கை மதிப்பிடுக.